கிதம்பைச் சித்தர்
பாடல்.

உ

கடவுள் துணை.

குதம்பைசித்தர்பாடல்.

---(*)---

இஃது,

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சென்னை சூளை,

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

கஅஅசு ௵.

உ

கடவுள்துணை.

* குதம்பைசித்தர்பாடல்.

வெட்டவெளிதன்னை மெய்யென்றிருப்பார்க்குப்-
பட்டயமேதுக்கடி * (குதம்பாய்) பட்டயமேதுக்கடி. (க)

மெய்ப்பொருள்கண்டு விளங்குமெய்ஞ்ஞானிக்குக்-
கற்பங்களேதுக்கடி (குதம்பாய்) கற்பங்களேதுக்கடி. (உ)

காணாமற்கண்டு கருத்தோடிருப்பார்க்கு-வீணாசை
யேதுக்கடி (குதம்பாய்) வீணாசையேதுக்கடி. ௩

---

* குதம்பை-ஆபரணம்.

* குதம்பாய்-ஆபரணத்தையுடையவள்.

குதம்பைசித்தர்பாடல்.

வஞ்சகமற்று வழிதனைக்கண்டோர்க்குச்— சஞ்சல
மேதுக்கடி(குதம்பாய்) சஞ்சலமேதுக்கடி. ௪

ஆதாரமானவடிமுடிகண்டோர்க்கு வாதாட்டமே
துக்கடி(குதம்பாய்) வாதாட்டமேதுக்கடி. ௫

நித்திரைகெட்டு நினைவோடிருப்பார்க்கு - முத்தி
ரையேதுக்கடி (குதம்பாய்) முத்திரையேதுக்கடி. ௬

தந்திரமான தலந்தனினிற்போர்க்கு — மந்திரமே
துக்கடி(குதம்பாய்) மந்திரமேதுக்கடி. ௭

சத்தியமானதவத்திலிருப்போர்க்கு — உத்தியமே
துக்கடி(குதம்பாய்) உத்தியமேதுக்கடி ௮

நாட்டத்தைப்பற்றி நடுவணைசேர்வோர்க்கு—வாட்
டங்க ளேதுக்கடி (குதம்பாய்) வாட்டங்க ளேதுக்
கடி.

முத்தமிழ்கற்றுமுயங்குமெய்ஞ்ஞானிக்குச்-சத்தங்களேதுக்கடி (குதம்பாய்) சத்தங்களேதுக்கடி. ௰

உச்சிக்குமேற்சென்றுயர்வெளிகண்டோர்க்கு-இச்சிப்பிங்கேதுக்கடி (குதம்பாய்) இச்சிப்பிங்கேதுக்கடி. ௰௧

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு-மோகாந்தமேதுக்கடி (குதம்பாய்) மோகாந்தமேதுக்கடி. ௰௨

சாகாமற்றூண்டி தனிவழிபோவார்க்கு- ஏகாந்தமேதுக்கடி (குதம்பாய்) ஏகாந்தமேதுக்கடி. ௰௩

அந்தரந்தன்னிலசைந்தாடுமுத்தர்க்குத்-தந்திரமேதுக்கடி (குதம்பாய்) தந்திரமேதுக்கடி. ௰௪

ஆனந்தம்பொங்கியறிவோடிருப்பார்க்கு - ஞானந்தானேதுக்கடி (குதம்பாய்) ஞானந்தானேதுக்கடி. ()

சித்திரக்கூத்தைத் தினந்தினங்காண்போர்க்குப்- பத்திரமேதுக்கடி (குதம்பாய்) பத்திரமேதுக்கடி. ()

முக்கோணந்தன்னின் மூலைத்த மெய்ஞ்ஞானிக் குச் - சட்கோணமேதுக்கடி (குதம்பாய்) சட்கோண மேதுக்கடி. ௰௭

அட்டதிக்கெல்லா மசைந்தாடுநாதர்க்கு- நட்டணை யேதுக்கடி(குதம்பாய்) நட்டணையேதுக்கடி. ௰௮

முத்திபெற்றுள்ள முயங்குமெய்ஞ்ஞானிக்குப்- பத்தியமேதுக்கடி குதம்பாய்) பத்தியமேதுக்கடி. ()

அல்லலைநீக்கி யறிவோடிருப்பார்க்குப் - பல்லாக் கேதுக்கடி (குதம்பாய்) பல்லாக்கேதுக்கடி. ௨௰

அட்டாங்கயோகமறிந்தமெய்ஞ்ஞானிக்கு - முட் டாங்கமேதுக்கடி(குதம்பாய்) முட்டாங்கமேதுக்கடி. ()

வேகமடக்கிவிளங்குமெய்ஞ்ஞானிக்கு - யோகந் தானேதுக்கடி (குதம்பாய்) யோகந்தானேதுக்கடி. ()

மாத்தானைவென்று மலைமேலிருப்பார்க்குப் - பூத்
தானமேதுக்கடி (குதம்பாய்) பூத்தானமேதுக்கடி. ()

செத்தாரைப்போலத் திரியு மெய்ஞ்ஞானிக்குக்-
கைத்தாளமேதுக்கடி (குதம்பாய்) கைத்தாளமேதுக்
கடி. உச

கண்டாரைநோக்கிக் கருததோ டிருப்பார்க்குக்-
கொண்டாட்டமேதுக்கடி (குதம்பாய்) கொண்டாட்ட
மேதுக்கடி. உரு

காலனைவென்றகருத்தறிவாளர்க்குக்-கோலங்களே
துக்கடி(குதம்பாய்) கோலங்களேதுக்கடி. உசா

வெண்காயமுண்டு மிளகுண்டுசுக்குண்டு-உண்கா
யமேதுக்கடி(குதம்பாய்) உண்காயமேதுக்கடி. உஎ

மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்பார்க்குத்-தே
ங்காய்ப்பாலேதுக்கடி (குதம்பாய்) தேங்காய்ப்பாலே
துக்கடி. உஅ

பட்டணஞ்சுற்றிப்பகலேதிரிவார்க்கு - முட்டாக்
கேதுக்கடி (குதம்பாய்) முட்டாக்கேதுக்கடி. உகூ

தாவாரமில்லை தனக்கொருவீடில்லை-தேவாரமேது
க்கடி (குதம்பாய்) தேவாரமேதுக்கடி. ௩௰

பின்னையறிந்துதலைவனைச்சேர்ந்தோர்க்குப் - பின்
னாசையேதுக்கடி(குதம்பாய்)பின்னாசையேதுக்கடி. ()

பத்தாவுந்தானும் பதியோடிருப்பாருக்- குத்தார
மேதுக்கடி (குதம்பாய்)உத்தாரமேதுக்கடி. ௩உ

குதம்பைசித்தர்பாடல்

முற்றுப்பெற்றது.
